**செய்தி வெளியீடு எண்: 12** **நாள்: 06.01.2011.**

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை**

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மற்றும் மருத்துவமனைகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் நேர்காணல் மற்றும் கலந்தாலோசனை செய்து உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது. இதுவரை மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஏற்கனவே முப்பத்தி நான்கு கலந்தாய்வுகள் மற்றும் ஆலோசனை கூட்டங்கள் மூலம் 6978 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தமிழகத்தின் மலைப்பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ மருத்துவமனைகள் மற்றும் நீண்ட நாட்களாக காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை சிறப்பு நியமனம் மூலம் நிரப்பிட அரசு ஆணையிட்டுள்ளது (அரசாணை எண்.368, மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள்.30.12.2010). மேற்படி பணியிடங்களை (தற்காலிகமாக பொது விதி 10 (a)(i) அடிப்படையில்) நிரப்ப தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி. இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை, எண்.359, அண்ணாசாலை, டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை–600 006. விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்.10.01.2011.

மேற்கண்ட விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் **www.tnhealth.org** என்னும் இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

**வெளியீடு:–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**